ஞாயிறு வெளியீடு விலை 0-1-3 REGD. NO. M. 4453

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

# திராவிடநாடு

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 14—5—44 | இதழ் 10.

## பெரிய இடத்துக் கலியாணம்.

பெரிய இடத்துக் கலியாணமென்றால் பணக்காரர்கள் கலியாணமென்பது அர்த்தம். கலியாணம் அதிகநாட்களோடும் ஆடம்பரச் செலவோடும்செய்யாமல்சுருக்கியும் சுருக்கமான காலத்திலும் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. அனேகமாக எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். என்றாலும் சுருக்கமாகச்செய்ய முடிவதில்லை என்றும் மூன்று நான்கு நாளில்லாமல்கலியாணத்தின் சீர்களை முடிக்கமுடியாதென்றும் சுருக்கினால் ஊரார்கேவலமாக நினைப்பார்களென்றும் இது முதற்கலியாணமென்றும், இதுசம்மவீட்டுக் கடைசிக்கலியாணமென்றும் ஆடம்பரச் செலவோடும் அதிகநாளும் கூட்டிக்கலியாணம்செய்து கடன்பட்டு அதன் முழுத்தொல்லையையும் அவசியமில்லாததையும், உணர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். முன்யோசனையில் காணவேண்டியதைப் பின்யோசனையில் கண்டாலும் பிரயோஜனமில்லை.

பண்டைக் காலத்துக் கலியாணம் பந்துக்களோடும், சினேகிதர்களோடும், உள்ளூர்வாத்தியத்தோடும் தீர்ந்து, வடை, பாயாசம், பணியாரம், வாழைப் பழம், பழயசோறு, நீர்மோர், சந்தண வெற்றிலைப் பாக்கோடு திருப்திஅடைந்துவிடும். இப்பொழுதுள்ள கலியாணங்களோ, எதிலும் திருப்திப்படுவதில்லை.

இப்பொழுது நடக்கும் கலியாணங்களுக்கு பந்துக்கள், அரிமுகஸ்தர்கள் சினேகிதர்கள்,மிட்டா, மிராசு, பட்டாபண்ணை, ஜெமீன்தார்கள், வியாபாரிகள், பாங்குக்காரர்கள், மாற்றப்பட்டவர்கள், பதில்வந்தவர் இருக்கிறவர் முதலிய உத்யோகஸ்தர்கள், அவர்கள் குமஸ்த்தாக்கள், சிப்பந்திகள், தாலுக்கா ஜில்லாபோர்டு மெம்பர்கள், பிரசிடெண்டு முனிசிபால்டிகவுன்சிலர்கள், சேர்மன்,இவர்கள்ஆபீஸ்குமாஸ்தாக்கள், சிப்பந்திகள்,அவர்களுக்குவேண்டியவர்கள், மாஜிமெம்பர்கள், சேர்மன்கள், பிரசிடெண்டுகள், கண்ணில்கண்டதில்கேட்ட பத்திரிகையில்படித்த பக்கத்திலிருப்பவர்கள் சொன்ன பெரிய மனிதர்கள், அழைக்காமல் வரும் சாஸ்திரிகள், வைதிகர்கள் சாமியார்கள்,மூன்று நாள் காலந்தள்ள நினைப்பவர்கள், ஆடம்பரத்தைப்பார்க்கவருகிறவர் சங்கீதப் பிரியர்கள், மாப்பிள்ளை வீடென்றும் பெண்வீடென்றும் கண்டுபிடிக்க முடியாதவர்கள், கலியாணவீட்டிற்குப்போனால் நம்கச்சேரியும் வைத்துக்கொள்ளுவார்கள் என்றுவரும் பாகவதர்கள், மரியாதை யாசகர்கள், இனும் வாங்க வருகிறவர்கள், சொக்கா ஜோபியைப் பார்ப்பவர்கள், குழந்தைகள் கழுத்தையும் கையையும் கவனிப்பவர்கள், வந்திருக்கும் பெரியவர்களின் காரியஸ்தர்கள், வேலையாட்கள், வண்டிஓட்டிகள், இதம்பேசிப் பிரபுக்களைச் சந்தோஷப்படுத்திக்கொண்டிருப்பவர்கள், இவற்றோடு கலியாணப் பிரபுவின் குடியானவர்கள், லேவாதேவிக்காரர்கள், சிப்பந்திகள் இவர்களிஷ்டஜன பந்துமித்திரகூட்டங்கள் சோறோ சோறு என்கிற பிச்சைக்காரக்கூட்டத்தின் இரைச்சல், இத்தனைப் பேர்களும் சேர்ந்தால்தான் பணக்காரர்களின் கலியாணம் பந்தியாகுமாம்.

சாப்பாட்டுச்சாமான், போட்ட கணக்குக்குமேல்வாங்கவேண்டும்.குலாப்புஜான் குல்பஜாமுதலிய பம்பாய்மிட்டாய்வகைகள், பேணி, லாடு, ஜிலேப்பி, ஆப்பிள், ஆரஞ்சி, திராட்சை, முந்தரிப்பருப்பு, பாதாம், சாரப்பருப்பு, காப்பி, டீ, கொக்கோ, சோடா, கலர், பீர், விஸ்க்கி, சிகரெட், சுருட்டு,சீட்டுக்கட்டு, வாசனைப் பாக்கு, வாசனைப்புகையிலை வாசனைச் சுண்ணும்பு, மதுரைச் சந்தணம், மைசூர் பத்தி, பூச்செண்டுவகை ஆரத்தினுசுகள் வெளியூர் தங்கநாகசுரம், பாண்டு, பாட்டுக்கச்சேரி, கதை கொல்லிமலை, சிறுமலை வாழைப்பழம் பால் தயிர் நெய் இத்தனையாலும் கலியாணவீட்டை நிறைத்துவிடவேண்டும்.

இத்தனை கூட்டங்களையும் அவரவர்கள் அந்தஸ்த்துக்கு, யோக்யதைக்கு, சௌகரியத்திற்கு, பெருமைக்கு, பிரியத்திற்கு, ஆணவத்திற்கு, அவர்கள்காட்டும் அசம்பாவிதத்திற்கு, ஜாதிக்கு, சமயத்திற்கு, வழக்கபழக்கத்திற்கு,வைதிகத்திற்குத்தக்கபடிவைத்து உபசரித்து வழியனுப்புவது கலியாணக்காரனுக்குப் பெருங்கஷ்டமாகும்.

பலருக்குத் தனிவீடு, பலருக்குத் தனி அறை, சிலருக்குத் தனிபங்களாவும்வேண்டும். எத்தனை இடம் தயார்செய்தாலும் இடம்பத்துவதில்லை. தனிச்சாப்பாடு, தனி சமயல், வைதீகச்சமயல், பத்தியச்சாப்பாடு, பலகாரச்சாப்பாடு, கோதுமைச் சாப்பாடு, விரதச்சாப்பாடு, பாட்டுக்காரர்களும் மேளக்காரர்களும் பணக்காரர்களைப் போலிருப்பவர்களானதால் பழயகாலத்தைப் போல வாசலில் படுத்துக்கொள்ளவும் சாப்பிடவும் சொல்ல முடியாது. அவர்களுக்கும் தனிவீடு தனிச் சாப்பாடுவேண்டும். சுக்குத்தண்ணி, சித்தரத்தை, அதிமதுரம் அக்கிராக்காரம்கூட கேட்பார்கள். ஒருவர் ஒன்றுகேட்பார் மற்றவர் மற்றொன்று கேட்பார் பின்னொருவர் வெகு அவசரமாக வேறொரு சௌகரியம் வேண்டுமென்பார்.

கற்பூரம் கொளுத்திச் சாப்பிடுகிறவர்கள், எள்ளு இறைத்துச் சாப்பிடுகிறவர்கள், காகத்திற்குச் சோறுபோட்டு சாப்பிடுகிறவர்களுமிருப்பார்கள். எள்ளும், கற்பூரமும் கேட்பார்கள். இந்தப்பெரிய கலியாணவீட்டு உக்ராணத்தில் கற்பூரமும் எள்ளும் தேடிக்கொண்டுவருவது சாதாரணமா? எள்ளோ கற்பூரமோகேட்பவர்கள் முக்கியபணக்காரர்களாயிருந்தால் இவர் வரவை எதிர்பார்த்து நின்று சில முக்கியஸ்தர்கள் பந்திக்குப் போகாமல் நிற்பார்கள் அதற்குள் பந்தியின் முக்கிய இடம் நிறைந்துவிடும். பந்திக்குப் பணக்காரர்களை அழைப்பார்கள் பணக்காரர்கள் எழுந்து எல்லாம்சரிப்படுத்தி பக்கத்திலிருப்பவர்களிடம் வேடிக்கைப்

2-ம் பக்கம் பார்க்க.

## பெரிய இடத்துக் கலியாணம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசி காரியஸ்தனுக்கு சங்கதி சொல்லி கைகெடியாரமோ கைகுட்டையோ ஏதேனுமொன்றுக்கு வேலைக்காரனை எதிர்பார்த்து பந்திக்கு வருவதற்குள் அங்கும் கூட்டம் நிறைந்துவிடும். இதை எல்லாம் பார்த்த கலியாண எஜமான் அவசரப்படுகிறார். பல்லைக்கடிக்கிறார், காரியஸ்தர்களை கடுமையாகப் பார்க்கிறார்; மரியாதையும் மதிப்பும் போய்விட்டதாக வெட்கப்படுகிறார் எல்லாரும் கலியாணத்திற்கு வந்தவர்கள். கோபத்தைச் செலுத்தவழியில்லை அதிகாரம் போக இடமில்லை, குற்றத்தைச் சாட்ட மார்க்கமுமில்லை. [illegible] நேரமும்போய் சொக்கவாசல் இடியும் பட்டு சீரங்கம் கதவடைப்பும் வந்து திருப்பதி தருமசேவைகாட்சிப்போலாகி சோர்வடைந்த பக்தனைப்போல் இப்படித்தான் பெரிய இடத்துக்கலியாணமிருக்குமென நினைக்கிறேன்.

கலியாணம் செய்ய ஆரம்பிக்கும்மணக்கோட்டைக்குப் பணமும் அழைப்பும் சாமானும் வாத்தியங்களும் இவைகளுக்குப்போட்ட கணக்குப்படி அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யும் கணக்குப்பொறுப்பும் தப்பாக இருப்பதாலும், சரிப்படுத்திவிடலாமென்று அலட்சியமாக நினைப்பதாலும் பலபேர் அபிப்பிராயங்களினாலும் கலியாணகஷ்டங்கள் அதிகரித்து [illegible]. [illegible] ஒரு விவகாரத்தின் ஒழுங்கு நிர்ணயம் அதன் அவசியம் அவரவர்கள் நடந்துகொள்ள வேண்டியவேலைகடமை முதலியவைகளில் செவ்வையாய் பழக்கப்பட்டில்லாததினால் எவ்வளவுபணச்செலவுசெய்தாலும் பாடுபட்டாலும் செம்மைப்படுவதில்லை. மணவரையில் முகூர்த்தத்திற்கு வேண்டிய சாமான்கள் இன்னவை என்பது இனியும் நமக்குத்தெரியாது. புரோகிதனைக்கேட்கவேண்டும். அவருக்கும் தெரியாது தோன்றியதைச் சொல்லுவார், தோன்றியதைக் கேட்பார். அன்னியர் அவஸ்தையையோ கஷ்டத்தையோ, நினைக்கார். வைதீககர்மம்தான் வைத்த வழி எல்லாமிருக்கும், அசைத்த இடமெல்லாம் ஆடும் என்பது அவர்கட்குத் தெரியும். மணவரையிலிருந்து இரண்டு மஞ்சள் கிழங்கு வேண்டுமென்பார். இது சாதாரணமாக வீட்டில் இருக்கக்கூடியதுதான் என்றாலும் பெரும்பங்களாக் கலியாணங்களில் மஞ்சக்கிழங்கு கிடைக்காது. இப்பொழுது மஞ்சள் கிழங்கை பெண்கள் உரைத்துக்குளிப்பதில்லை மஞ்சள்பொடியில்சேர்ந்துவிட்டது. பெரியகலியாணவீட்டில்விரளிமஞ்சளைத்தேடிஎடுப்பதேகஷ்டம், எடுத்தால் அதில் கிழங்கு மஞ்சளிருக்காது. கலியாணகாரியம், மஞ்சள்முக்கியம், புரோகிதர்சொன்னது கார்போட்டுக் கடையிலிருந்தாவது வெகுசல்திகொண்டுவந்து கொடுத்துவிடுவார்கள் அதுவரையிலும் எத்தனையோ அசம்பாவிதங்கள். ஆலோசனையில்லாத புரோகிதனின் வார்த்தை எத்தனையோ தொந்தரவுகளை உண்டாக்கிவிடும்.

இதற்கெல்லாம் காரணம் கண்ணைத் திறந்திருத்தல், உண்ணல், குடித்தல், தூங்கல், கலியாணம்பண்ணல், பாடைஏறல் முதலிய சகலகாரியங்களும் பிறருடைய ஆணைப்படியேசெய்து வழக்கப்பட்டிருக்கிறோம்.

கலியாணத்தால் கஷ்டப்பட்டவர்களும் அவர்[illegible] அனுபோகமும் அநேகமுண்டு. ஆக்கநேரமில்லை ஆக்கினதைப் போடயிடமில்லை. ஆக்குவதுபாதி அவி[illegible] பார்ப்பாரச் சமயல்காரர்கள்பண்ணும்நஷ்டம் பலவிதம். வந்தபார்ப்பானுக்குச்சோறும் தெட்சணையும் வாங்கின பூணூலும் விசிரியும் வைதிகப்பார்ப்பானுக்குச் சொந்தம். வந்தவர்கள்தின்பது கொஞ்சம்வாரிஇறைப்பது அதிகம். நேரத்தில் சோறுபோடமுடியாது சலிப்பும் சங்கடமும் மலிந்துவிடும் கஷ்டமோ சொல்லமுடியாது. தேககஷ்டத்தைப் பார்த்தால் தாயார் சகியாள் பொருள் விரயத்தைப்பார்த்தால் தேடிவைத்தவன் பின்னுமொருமுறை செத்தேபோவான். பெருமையோ அன்றுதான். தொந்தரவோ பிள்ளைகுட்டிகளையும் பிடித்துக்கொள்கிறது. லாபமோ முகஸ்துதி, நஷ்டமோ நஞ்சைக்கும் புஞ்சைக்கும்.

ஆனதால் இத்தனைக்கும் ஆளாவதை விடச்சுயமரியாதைக்காரர்சொல்லுவதை ஆலோசித்து பெருமைஎன்று நினைத்துக்கொள்ளும்பிரமையைவிட்டு ஒரு சிறுஅவசியக்கூட்டத்தில் ஒருநாள் கலியாணம் செய்தால்கலியாணத்திற்குக் கலியாணமுமாகும் கண்டவர்களுக்குப்பதிலும்சொல்லவேண்டியதில்லை. இங்ஙனம்,

கைவல்யம்.

---

## மனு, மரணப்படுக்கையில்!

மனு, மரணப்படுக்கையிலே கிடக்கிறான்! இங்கல்ல! இங்கு இன்னமும் மாப்பிள்ளைக் கோலத்திலேதான் இருக்கிறான், ஆப்பிரிக்காவிலே மனு, மரணத்தருவாயிலிருக்கிறான். அங்கு இந்தியர்கள் வீடு பெற்றுவாழ அருகதை உடையவர்கள் அல்ல என்று பரங்கிகள் ஜாதித்திமிர் காட்டினார்களல்லவா, மனு அநீதிபோல அதுஇப்போது ஒழிகிறது. அந்த அநாகரிகச்சட்டத்தைத்தென் ஆப்பிரிக்க சர்க்கார் ஒழித்துவிட்டது. இனி அங்கு குடியிருக்க இந்தியர் இடம்பெறலாம், இடம்பெறும் அனுமதி அளிக்க ஒரு தனிக்கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு இந்தியரும் அங்கத்தினர்கள், மனு, மரணத்தருவாயில் இருக்கிறான் அங்கு—இங்கோ?

## புலவர்கட்கு!

வாலாஜாபாத்தில் 5—6—7 ஆம் தேதிகளில் நடைபெற்ற தமிழ்ப் புலவர் மாநாட்டிற்குச் சென்னைச்சுயமரியாதைச் சங்கத்தினர் அனுப்பி இருக்கும் தீர்மானங்கள்.

1. ஆங்கில இலக்கியத்திலிருப்பது போன்று தமிழ் இலக்கியத்[illegible] வரலாறுகள், கதைகள் முதலியவைகளை, இவையிவை வரலாறுகள், இவையிவை கட்டுக் கதைகள், இவையிவை ஆரிய [illegible] தனித்தனியே பிரித்துக்காட்டி நூல்களை பதிப்பிக்க வேண்டுமென்றும், அவ்வரையில் [illegible] மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. தமிழ் நெடுங் கணக்கைச் சுருக்கியும், இன்னும் தேவையான ஒலிகளுக்கு (f, b, d, z முதலியன) வேண்டிய புதிய எழுத்துக்களைச் சேர்த்தும் சீர்திருத்துவதற்கான பல திறப்பட்ட கருத்துடைய பிரமுகர்களைக்கொண்ட கமிட்டியொன்றை நிறுவவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

3. கடவுள், மதம், மூடநம்பிக்கை முதலியவைகளைத் தமிழ் இலக்கியத்துடன் சிறிதுகூடக் கலக்காமல் சகல [illegible] தினரும் படித்துணரக்கூடிய முறையில பழைய தமிழ் நூல்களைக் கற்பிக்கவேண்டுமென்றும், புதிய நூல்களை இயற்ற வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

4. பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள்முதலியவைகளில் பாட புத்தகங்களாக வைக்கப்படும் தமிழ் நூல்களில் 1000 சொற்களில் 5க்குமேல் ஆரியமொழிச்சொற்கள் இருத்தல்கூடாதென்றும், தமிழைக் கொலை செய்வதற்கு டெக்ஸ்ட் புக்கமிட்டியார் துணைபுரியக் கூடாதென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

5. இங்கிலீஷைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் எப்படிக் கிருஸ்துமதத்தைக் கலக்காமல் இலக்கியத்தைக் கற்பிக்கின்றார்களோ அதேபோல், தமிழைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் இலக்கியத்தில் மதத்தைக் கலக்காமல் கற்பிக்கவேண்டுமென்றும், இதற்குத் தகுதியுள்ளவர்களையே ஆசிரியர்களாக நியமிக்கவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

6. பழைய புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உரைகள் எழுதுவதை நம் தமிழ்புலவர்கள் சிறிது காலத்திற்காவது நிறுத்திவைத்து, இங்கிலீஷைப்போல் விஞ்ஞானம், பொருளாதாரம், அரசியல், நிலநூல், தாவரநூல், உடற்கூற்று நூல், மருத்துவநூல், கதைகள், நாடகங்கள் முதலிய புதுப்புது நூல்களை ஆயிரக்கணக்கில் இயற்றித் தமிழை உண்மையாகவே வளர்க்கவேண்டுமென இம்மாநாடு வற்புறுத்திக்கூறுகிறது.

தொடர்கதை

# பார்வதி பி. ஏ;

சேளமியன்.

கதை கற்பனையே, கதையில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

*[முன்பு:-லேவாதேவி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறனதுமார்பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும்பத்திரிகை நடத்தப்படுகிறது. இருக்கள் தமாதநபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதமுண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளி நடனம் பார்க்கக் கோளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம்செய்து கொண்டு, உத்தமியைக் கைவிடுகிறான், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறாள். அங்கு லேடிடாக்டர் லலிதா தன் கதையைக் கூறுகிறாள். பிறகு,....]*

"அம்பக்" ஆறுமுகத்தின் இயல்பு எப்படி, எந்தக்காரியத்தைக் கொண்டாவது தன் வாழ்க்கையை நடத்திக்கொள்வது என்று அமைந்திருந்ததோ அதுபோலவே பார்த்திபனுடைய இயல்பு, யார் எந்த நோக்கத்தோடு எந்தக்காரியத்தை நடத்த முன்வந்தாலும், அவர்களைக் கொண்டு தனக்கொரு விளம்பரம் தேடிக்கொள்வது என்ற முறையிலே இருந்தது. எனவேதான், ஆறுமுகத்தின் அழைப்பைப் பார்த்திபன் ஒருவாய்ப்புஎன்று கருதிக்கொண்டான், மாநாடுநடத்தஉதவி செய்தான். ஆறுமுகத்தைக் கண்டதும், பார்வதிக்கு, அவன் ஒரு ஏமாற்றுப்பேர்வழி என்பது விளங்கிற்று என்ற போதிலும், அவனுடன்பேசி, மேலும் பலதகவல்களைத் தெரிந்துகொள்ளவிரும்பினாள். எப்படி எப்படிப் பேசுவார்களோ அதற்கேற்றபடிபேசுவதுதானே ஆறுமுகத்தின் வாடிக்கை. அதன்படியே அன்றையபேச்சு இருந்தது. பார்வதி, பல விஷயங்களைப் பற்றிப் பேசினாள், ஒவ்வொரு விஷயத்திலும் தனக்குத்தெளிவு உண்டு என்பதைக் காட்டிக்கொள்ள எண்ணினான் ஆறுமுகம். "தொழிலாளர்கள் விஷயத்திலே, அக்கரை காட்டுபவர்களிடம் எனக்குப் பெருமதிப்பு பிறப்பதுண்டு. பெங்களூருக்கு ஒரு காரியமாகவந்தேன். இங்கு அச்சுத்தொழிலாளர் மாநாடுநடைபெறப் போவதாக அறிந்து மகிழ்ந்தேன். இதனையார் நடத்துவது என்று விசாரித்தேன், தங்கள் பெயரைக்கூறினார்கள், உடனே தங்களைக் காணவேண்டுமென்று விருப்பபட்டேன். தங்களுக்கு வேறு எத்தனையோ வேலையிருக்கும், நான் தங்களுக்குத் தொல்லைகொடுத்துவிட்டேன்" என்று பார்வதி, சம்பிரதாயமான உபசாரமொழிபுகன்றாள். ஆறுமுகம் மிக அலட்சியமாக "ஒருவர் மதிக்கவேண்டும் புகழவேண்டும் என்பதற்காக நான் ஒரு காரியமும் செய்வதில்லை! தொழிலாளர் பாவம் வாயில்லாத பூச்சிகளாக இருக்கிறார்களே. ஏதோ நம்மாலான உதவியைச் செய்வோம் என்ற கருத்தோடுதான், இந்தமாநாட்டை. ஆரம்பித்தேன். உண்மையிலேயே, எனக்குவேலை அதிகந்தான் என்றாலும், மாநாடுவிஷயமாக யாரோ ஒருமாது பேசவிரும்புகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், போய்ப் பேசிவிட்டுத்தான் வரவேண்டும் என்று தோன்றிற்று. உங்களுடைய ஒத்துழைப்பும் மாநாட்டுக்கு வேண்டும்" என்றுஆறுமுகம்கூறினான். பிறகு இந்த உரையாடல் நடக்கலாயிற்று.

"பார்த்திபனைத்தங்கட்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்?"

"கொஞ்சநாட்களாகத்தான், ஏன்?"

"ஒன்றுமில்லை. தொழிலாளர்களின் மகாநாட்டுக்குத் தலைவராகத்தேர்ந்தெடுத்தீர்களே, அவரைத் தங்கட்கு அதிகமாகத் தெரியும் என்று எண்ணினேன்"

"இதிலென்ன இருக்கிறது. தலைமை வகிக்க யாரை அழைத்தால் என்ன? பொம்மைபோல உட்காரவேண்டியதுதானே. சகலகாரியத்தையும்நான்கவனித்துக்கொள்ளப்போகிறேன். ஒப்புக்குத்தலைவர். இந்தப் பார்த்திபனிடம் ஒரு பத்திரிகை இருப்பதால் அந்த ஆளை மாநாட்டுத் தலைவனாகஇருக்கச்செய்தால், பத்திரிகையிலே மாநாட்டுச் செய்தி அதிகமாகவெளிவருமல்லவா, அதற்காகத்தான், பார்த்திபனை இழுத்தேன்"

"நல்ல தந்திரசாலி நீர். ஆனால் பார்த்திபனை நீர் உபயோகப்படுத்திக்கொள்ள விரும்புவதுபோலப், பார்த்திபனும் தன்னுடைய சொந்த விளம்பரத்துக்கு இந்த மாநாட்டைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினால்......"

"விரும்பட்டுமே, நமக்கென்ன நஷ்டம்?"

"நமக்கு ஒன்றுமில்லை. தொழிலாளரின் பெயரைக்கூறிக்கொண்டு, இப்படி ஒரு விளையாட்டுகூடாதே என்று கூறினேன்"

"இதிலே விளையாட்டு என்ன இருக்கிறது? நான் தொழிலாளர் தோழன், பார்த்திபனோ, வேறு எவனோ, எந்தக் காரணத்துக்காகவோ மகாநாட்டுக்கு உதவிசெய்கிறார்கள், அந்தஉதவியைநான் தொழிலாளரின் நன்மைக்குத்தானே பயன்படுத்தப் போகிறேன்"

"அதுசரி. எல்லோரும் தங்களைப் போலவே நல்லகுணமுடையவர்களாக அமைவார்களா?"

"மகாநாட்டிலே, தாங்களும் கலந்துகொள்ளவேண்டும். இன்று தங்கள்பெயருடன் ஒருபுது விளம்பரம் வெளியிட உத்தேசம்"

"அதெல்லாம் வேண்டாம். நான் மகாநாட்டுக்கு வருகிறேன். பேசுவதிலேஎனக்குப்பிரமாதமானபயிற்சி கிடையாது. என் பெயரை விளம்பரப்படுத்தவேண்டாம்."

"பெண் தொழிலாளர்களைப்பற்றித் தாங்கள் ஒருசிறு பிரசங்கம் செய்யவேண்டும்"

"எனக்குப் பிரசங்கம் செய்யத்தெரியாது."

"நான் சில குறிப்புகள் தருகிறேன், அதைவைத்துக்கொண்டு பேசிவிடலாம்"

"தங்களுக்கு அந்தச்சிரமம்வேண்டாம். நான் மகாநாட்டுக்கு வருகிறேன்."

ஆறுமுகம் இந்தப்பேச்சுக்குப் பிறகு, நன்கொடையை எதிர்பார்த்து நின்றான். கிடைக்கும் குறியும் காணாததால், வீண் வேலையாக முடிந்தது என்று விசாரப்பட்டான். ஒருகப் காப்பி, தான் அவன் கண்டபலன்!

மகாநாடு ஆடம்பரமாக ஆரம்பமாயிற்று. யானை குதிரையுடன் ஊர்வலம். தலைவர்களின் கழுத்துநோகுமளவு, மலர் மாலைகள். கோயிலில்விசேஷ தெரிசனங்கள். தர்மகர்த்தாக்களும், மடங்களின் ஆட்களும், ஊர்வலத்திலேகலந்துகொண்டனர். ஆலாலசுந்தரருக்கு இந்த ஆடம்பரச்செலவு தன்தலையிலேவந்துவிடுமோ என்றபயம் மேலிட்டுவிட்டது. ஊர்வலத்தைப் போட்டோ எடுத்தனர். பத்திரி

(6ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 14—5—44 ஞாயிறு

## 'துவஜாரோஹணம்!'

காஷ்மீரத்திவானாக இருந்தவரும். தற்போது, மத்திய மேல்சபையிலே வீற்றிருப்பவருமான சர். கோபாலசாமி ஐயங்கார், காங்கிரஸ்காரரல்ல,தேசியப்பற்றும், சுதந்திரக்கருத்துங்கொண்ட மேதாவி என்று, கூறப்பட்டவர். அவர் சின்னாட்களுக்கு முன்னர், தில்லை மூவாயிரவரின் திருஅவதாரத்தலத்திலே கூடிய, கல்வி மாநாட்டிலே தலைமைபூண்டு தமது கருத்தினைத் திருவாய்மலர்ந்துள்ளார். அதனை நோக்கும்போது ஐயங்கார், இனஇயல் பின்படி, பழமைக்குத் தொண்டுசெய்யும் கைங்கரியத்துக்கான "துவஜாரோஹணம்" செய்கிறார் என்று தோன்றுகிறது. நாட்டிலே தற்குறித்தனம் இருக்கக் கூடாது என்றும், பொதுக்கல்விபரவத்தக்கதிட்டத்தைச் சர்க்கார் விரைவிலே நடைமுறைக்குக்கொண்டு வரவேண்டுமென்றும், ஐயங்கார் கூறியிருக்கிறார், எவரும் எற்றுக்கொள்ளக்கூடியவையே இவை. ஆனால் இடையே, ஐயங்கார், காந்தியார் வெளியிட்ட வார்தா கல்வித்திட்டத்தைப் புகழ்ந்துரைத்து,அம்முறையைப் புகுத்தவேண்டுமென்று பேசியிருக்கிறார். எங்கே இருந்தால் என்ன? என்குறி ஒன்றேதான்! என்று ஆரியம் முழக்கமிடுவதுபோலிருக்கிறது, இதனைக் காணும்போது. காந்தியாரின் வர்தாத்திட்டம், வர்ணாஸ்ரம ஓலை, சனாதனச்சுவடி, என்று, கல்வி வல்லவர்களும், இனஇயல்பு அறிந்தோரும் கூறினர், கண்டித்தனர். குலத்துக்கொரு நீதி கூறும்கோணற் புத்தியைக் கொடுக்கக் கூடியதும், ஜாதிபேதத்தை நிலைக்கச் செய்வதும், குலத்துக்கொரு தொழில் கூறிப். பழங்குடி மக்களைப் பாட்டாளிகளாக்கிப் பாடுபடா இனத்தை ஆசானாக்கி, பாரிலே எவரும் எற்கமுடியாத அநீதியை நிலைத்திடச்செய்வதும், தந்தையின் தொழிலில் மகன் புகவேண்டும் என்ற தத்துவத்தைப்போதித்து அதன் மூலம், "சுதர்மத்தை" அதாவது ஆரிய உயர்வு திராவிடரின் தாழ்வு எனும் நிலையை ஆடாதிருக்கச்செய்வதுமான வர்தா திட்டத்தை ஒரு "வரப்பிரசாதம்" "கனபாடிகளுக்குக் காயகல்பம்" என முன்னாள் திவான் கருதக்கூடும், ஆனால் திராவிடப் பெருங்குடி மக்களோ, அதனைச் சனாதனத்தின் சதி என்று கருதுகின்றனர், இஸ்லாமிய இனம் அதனை இந்துக்களின் எதேச்சாதிகாரப்பொறி என்று எண்ணுகிறது, இதனைச் சர். ஐயங்காருக்கு நாம் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். தேசியக் கல்வி என்றால் ஆரிய ஆதிக்கத்தைப் புகுத்தக் கூடிய கல்விமுறை, என்று வெளிப்படையாகக் கூறுவதில்லை. ஆனால், உண்மையில் உட்பொருள் அதுவே, தேசியத் தொழில் வளர்ச்சித்திட்டம் என்று ஐயங்கார், சர்மா, ஆச்சாரி கூட்டம் கூறினால் அதன் உட்பொருள், மார்வாடிகளின் ஆதிக்கம் என்பதுதான். தேசிய சர்க்கார் என்றால் அதன் உட்பொருள் ஆரியஆட்சிதான்! சர். ஐயங்கார், வார்தா கல்வித் திட்டத்துக்கு வக்காலத்து வாங்கிப்பேசுவது வீண்வம்பை விலைக்கு வாங்குவதாகும். இந்நாட்டிலே, திராவிடத்திலே, கட்டாய இந்திக்கு என்னகதி நேரிட்டது என்பதைக் கவனியாமல் சர். கோபாலசாமி ஐயங்கார் வர்தாதிட்டத்திற்கு துவஜாரோஹணம் செய்கிறார், செய்யுமுன், மாஜிதிவான், மாஜி முதலமைச்சரைக் கலந்து பேசவில்லை போலும்! அன்று ஆச்சாரியார் கட்டாய இந்தியைப் புகுத்தியதன் "கொதிப்பு,' இன்றும் அடங்கவில்லை. சமரசத்தூதராக ஆச்சாரியார் இலங்கைசென்றபோது, கருப்புக்கொடிகள் காட்டப்பட்டனவாம்! சர். கோபாலசாமி ஐயங்காருக்குத் திராவிடத்தின் இன்றைய மனப்பாங்கு தெரியாது, அது அவருடைய குற்றமுமல்ல. கொற்றவனுக்குக் குற்றேவல் புரிந்துவிட்டு, வந்திருக்கிறார், இனிமேல்தானே நாடுசுற்றி, மக்களின் போக்கை அவர் தெரிந்துகொள்ளவேண்டும்!!



## போச்சா, செபாஸ்டபோலும்?

1942, ஜுலை 3ந்தேதி ஜெர்மானியரிடம் சிக்கிய செபாஸ்டபோல், 1944, மே 10ம் தேதி, திருப்பிப்பிடிக்கப்பட்டுவிட்டது. கிரைமியாவிலே, இதுதான் கடைசிஇடம், இனி ஜெர்மானியருக்குக் காலடிநிலமும் இங்கு இல்லை. செபாஸ்டபோல், ஜெர்மானியரிடம் சிக்கியபோது 300,000 பேரைப் பலிகொண்டது, இப்போதும் ஏராளமான ஜெர்மானியர் மாண்டனர். இந்த ரஷிய வெற்றியின் கீர்த்தியை உலகம் புகழுகிறது!!

## நடுத்திட்டு நரி!

இந்தியாவிலே புகுந்துள்ள ஜப்பானியப்படைகள்நடுத்திட்டு நரிபோல.இன்று நாலாபக்கமும் எதிர்ப்புக்கிடையிலேயிருக்கிறது. ஒரே அடியிலே இம்பாலையும் கொஹிமாவையும் பிடித்துவிடலாம் என்று எண்ணியது வீணாயிற்று. கொஹிமாவிலே சண்டை, ஓயவில்லை. ஜப்பானியரின் தாக்குதலுக்குத் தக்கவிதத்திலே நமது படைகள் பதில்கொடுத்து வருகின்றன. பல பகுதிகளிலிருந்து ஜப்பானியர்விரட்டப்பட்டனர். இதற்கிடையே ஜெனரல்ஸ்டில் வெல்லின் படைகள் வடபர்மாவிலே முன்னேறிக்கொண்டுள்ளன. ஜெனரல்விங்கேட் துவக்கிவைத்த அசகாயசூரப்படை, எதிரியின் பின்னணியில் புகுந்து சேதம்விளைவித்து வருகிறது. பிரிட்டிஷ் விமானப்படை பர்மாவிலே உள்ள ஜப்பானிய இலக்குகளைத்தாக்குகிறது. பசிபிக் கடலிலே அமெரிக்கக்கடற்படை, ஜப்பானியர் வசமுள்ள தீவுகளைத் தாக்குகிறது. இந்துமகா சமுத்திரத்திலே, பிரிட்டிஷ் சப்மெரைன் ஜப்பானியக் கப்பலைக் கவிழ்த்தது. ஜப்பானியர் அரக்கான் பகுதியிலே சற்றுசுறுசுறுப்பு காட்டுகின்றனர் ஆனால் நடுத்திட்டு நரிபோன்ற நிலை, இன்று ஜப்பானியப் படைகட்கு இருக்கிறது.

### காலமானார்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரும், மறைமலை அடிகளாரின் மருகரும், வற்றாதஇனப்பற்றும் தமிழ் ஆர்வமும்கொண்டவரும், தமிழகத்திலே இலக்கிய அறிவுபரவத்துணைசெய்தவரும்,நமது அன்பருமான, தோழர் திரு அரங்கம் பிள்ளை அவர்கள், திடீலெனத் திருநெல்வேலியில் தமதில்லத்தில் காலமானார் என்பதுகேட்டு மிகவருந்துகிறோம். நாதனைஇழந்து தவிக்கும் நீலாம்பிகை அம்மையாருக்கும், மக்கட்கும், மறைந்தவரின் தம்பியாருக்கும், மற்றையோருக்கும் நமது ஆழ்ந்தஅனுதாபத்தைச் தெரிவித்துக்கொள்கிறோம்.

### இந்தி ஒழிக!

வடாற்காடு வட்டாரத்திலே, இலவச கட்டாய இந்திபாடத் திட்டத்தை ரத்து செய்யும்படி, வடாற்காடு வட்டார ஆட்சி மன்ற அங்கத்தினர் தோழர் களம்பூர் குப்புசாமி முதலியார் அவர்கள் ஒரு தீர்மானம் அடுத்த போர்டு கூட்டத்திலே கொண்டுவர இருக்கிறாராம். எற்கனவே செங்கற்பட்டு, மதுரைவட்டார ஆட்சி மன்றங்கள் கட்டாய இந்தித்திட்டத்தை ரத்துசெய்து, தமிழர்களின் நன்றியறிதலுக்கு உரித்தானதுபோல, வடஆற்காடு வட்டார ஆட்சி மன்றமும் நடந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த அவசியமான தீர்மானத்தைக் கொண்டுவர முன்வந்த தோழர்களம்பூர் குப்புசாமி முதலியார் அவர்களை நாம் பாராட்டுகிறோம்.

# விஞ்ஞானவித்தகரின் வீரஉரை.

கோவையில் 28—4—44-ந்தேதி கவர்னர் தம்பதிகள் முன்னிலையில் நடைபெற்ற தோழர்கள் பாலகிருஷ்ணன்—சரோஜினி திருமணத்தின்போது தோழர் G. D. நாயுடு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு;—

"கவர்னர் அவர்களே, சீமாட்டிகளே: சீமான்களே,

எனது அழைப்பை மதித்து இங்கு எழுந்தருளிய மே. த. கவர்னருக்கும் ஹோப் அம்மையாருக்கும்முதலில்எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் வந்திருக்கும் அனைவருக்கும் இரண்டாவதாக எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹிந்து சமூகத்தார் குருட்டுத்தனமாகப் பின்பற்றி, வழக்கமாகச்செய்யும் மூடச் சடங்குகளில்லாமல் இன்று இம் மணவிழா நடைபெறப்போவதை நீங்கள் காணுவீர்கள்.

நாம் எவ்வளவுதூரம் முன்னேறினாலும், நவீன நாகரீகத்துக்குத் தகுந்தவாறு நம்மை நாம் சரிப்படுத்திக் கொண்டு வந்தாலும், பழயபயனற்ற அர்த்தமற்ற பழக்க வழக்கங்களைஅடிப்படையாகக் கொண்ட வைதீக மனப்பான்மைமட்டும் நம்மைவிட்டு அகலுவதில்லை. இதற்குக் காரணம்நமதுவைதீக நண்பர்களும் உற்றார் உறவினர்களும் நம்மை ஏசுவார்களே—சபிப்பார்களே என்பதேயாகும். நான் இப்பொழுது வைதீகர்களின் விருப்பு வெறுப்புஆகியவைகளை லட்சியம் செய்யாமல் கூடுமானவரை சிக்கனமாகவும் சாதாரணமாகவும் திருமணத்தை நடத்த முன்வந்திருக்கிறேன். எல்லா ஜாதி, எல்லா வகுப்பு இளைஞர்களுக்கும் இதுவழிகாட்டியாக முன்மாதிரியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

பச்சையாகச் சொல்லவேண்டுமானால் நான் எந்தப் பள்ளிக்கும்செல்லவில்லை. ஆனால் எனது இளமைப் பருவத்தை தோட்டங்களில் கழித்தேன். ஆனால், அப்பருவத்திலே சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, இராமாயணம், பாரதம், நன்னூல், தொல்காப்பியம்போன்ற தமிழ்ப் புத்தகங்களையும், தத்துவசாஸ்திரம், சோதிடம், மருத்துவ சம்பந்தமான அச்சில் கிடைக்கப்பெற்ற புத்தகங்களையும் படிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றேன். நாவல்களைத் தவிர இதர புத்தகங்களை எல்லாம் படித்தேன்.

எனது முதல் திருமணம் நிச்சயமாயிற்று. அச்சமயத்தில், எனது உறவினர் ஒருவர், "கல்யாணத்திற்காக உங்கள் மகனுடைய சம்மதத்தைப் பெற்றீர்களா?' என்று எனது தந்தையைக் கேட்டார். "ஓ! மாட்டுக்கழுத்தில் மணி கட்ட அதன் சம்மதத்தைப் பெறவேண்டுமா?" என்று வெகுசாதாரணமாகப் பதிலளித்தார். இதைக் கேள்வியுற்ற நான் திகைத்துப் போனேன். சரி பார்க்கலாம் அவர் (எனது தந்தை) எவ்வாறு மணியைக் கட்டுவார் என்று முடிவுசெய்து கொண்டேன். இச்சம்பவம் 32 வருடங்களுக்கு முன், அறியாமை நிறைந்த வைதீகம் தலைவிரித்தாடிய ஒரு கிராமத்தில் நிகழ்ந்தது.

நாயுடு வகுப்புக் கல்யாணங்களில்முதல் முக்கிய சடங்கு முதல் நாள் செய்யப்படும் நலுங்குஆகும். அடுத்தநாள்முகூர்த்தம் மூன்றாம்நாள் கங்கண விசர்ஜனம் என்பவை இதர சடங்குகளாகும்.

முதல் நாள் சடங்குக்கு முன், கிராமத்திற்கு வெளியே தோட்டத்தில் இருந்த வீட்டுக்குப் போனேன், யாருக்குந்தெரியாமல் அங்கே ஒளிந்துகொண்டேன்.

மாலை 7-மணிக்கு ஷை சடங்கு நடைபெற இருந்தது. சடங்கில் மணமகன்உட்கார்ந்திருக்கவேண்டும். மணமகனாகிய எனக்காகவிருந்தினர்கள்காத்துக்கொண்டிருந்தார்கள். இரவு 9—30 மணிவரை காத்திருந்தும் நான்வந்து சேரவேயில்லை. பாவம், வந்திருந்த விருந்தாளிகள், பின்னர், மணமகன் இல்லாமலே உணவருந்தினார்கள். இதற்கிடையில், எனது தந்தைக்காகவும்எனதுசிற்றன்னைக்காகவும்தோழர் L.R.G.நாயுடு அவர்களின் தந்தையார் அவர்கள் (இந்தமண்டபத்தில்இருக்கிறார்) எங்கும் என்னைத்தேடினார்கள். கடைசியாக நான் இருந்தயிடத்தைக் கண்டுபிடித்துவிட்டார்.

என்னை எப்படியோ நிர்பந்தித்து மணப்பந்தலுக்கு வந்துபெண்ணின்கழுத்தில் தாலியைக் கட்டுவதாக ஒப்புக்கொள்வது என்பதற்கும் இசையும்படிச் செய்தார். அறிவற்ற வேறு எந்த சடங்குகளையும் செய்யமுடியாது என மறுத்துவிட்டேன். அப்படியே, நான் தாலிகட்டினேன். ஒவ்வொரு சடங்குக்கும் சில அர்த்தமிருப்பதாகச் சொல்லி என்னைத் திருப்திப்படுத்த பல குருக்களும், தீக்ஷதர்களும் எவ்வளவோ முயன்றார்கள். நான் தமிழ் சாஸ்திரங்களை நன்கு படித்திருந்தினால், அவர்களுடைய வாதங்கள் என்னிடம் பயனளிக்கவில்லை.

பிறகு எனது அடுத்த கல்யாணத்திலும் எனது சகோதரருடைய கல்யாணத்திலும் அவசியமற்ற அர்த்தமற்ற சடங்குகளுக்கு நான் இடந்தரவேயில்லை. அந்நாட்களிலே, இத்தகைய சடங்குகளுக்கு எதிராக யாரும் எதுவும் செய்வது அவ்வளவு சாத்தியமான காரியமல்ல. அதிலும் அந்நாளில், மூத்தோருடைய சொல்லுக்கு மாறாக நடப்பது, எதிர்த்து நடப்பது சாத்தியமானதல்ல.ஆனாலும் நான் இதில் அன்றும் இன்றும் வெற்றி பெற்றேன். இப்பொழுது இது பலஇடங்களில்சாதாரணமான காரியமாகிவிட்டது.

திருமணம் எனப்படுவது, இன்னமணமகனும், இன்ன மணமகளும் இன்று முதல் சட்டப்படி கணவனும் மனைவியுமாய்விட்டார்கள் என்று அறிவிப்பதற்கான ஒரு காரியமாகும். துரதிஷ்டவசமாக இந்தக்காரியம் மணமக்களுக்கும், பெற்றோர்களுக்கும் பல நாட்களுக்குப் பெருந்தொல்லையையும் கொடுத்துவரக் கூடியதாய்விட்டது. அநேகமாக, கல்யாண விஷயத்தில் பெற்றோர்கள்தங்கள் தங்கள் பிள்ளைகளின்சம்மதத்தைப்பெறுவதேயில்லை.

அனேக, மணங்களில், திருமணம்ஆகிறவரை, மணமக்கள் ஒருவரையொருவர் பார்த்தே இருக்கமாட்டார்கள், பணக்காரக்குடும்பங்களைத் தவிர மற்றமக்களும் பழைய வழக்கம் என்ற காரணத்திற்காகத் தங்களுடைய சக்திக்குமேல் ஏராளமானப் பொருளையும், உழைப்பையும், காலத்தையும் வீணாக்குவதை நீங்கள் யாவரும் அறிவீர்கள். அவைகளைக் குறித்து விளக்கவேண்டிய அவசியமில்லை. பலருக்கு இதைக்குறித்து எவ்வளவோ எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் பயனில்லை. காரணம் அவர்களுக்கு வயதாய்விட்டது. ஆனால் இளைஞர்களிடையே இதனை எடுத்துக்காட்டிப் பேசினதில் நான் வெற்றி அடைந்திருக்கிறேன். ஜாதி மதவேற்றுமையில்லாமல் பலர் எனது அறிவுரையைக் கேட்டிருக்கின்றனர், இதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. இந்நகருக்கு 50 மைல் தூரத்திலுள்ள ஒரு முஸ்லிம் கனவான் 20 நண்பர்கள் முன்னிலையில் தமது விவாகத்தைச் செய்துகொண்டார். இந்நகருக்கு 22மைல்தூரத்திலுள்ள ஒரு பிராமணநண்பர் இந்தப்படியே ஆற்றோரத்தில் 4பேர் முன்னிலையில் தமதுவிவாகத்தைச்செய்துகொண்டார். எத்தகைய செலவோ சடங்கோ கிடையாது. இம்மாதிரி நடைபெற்றதிருமணங்களின் எண்ணிக்கை எவ்வளவோ என்னால் கொடுக்க முடியும். இந்தக்குடும்பங்கள் எல்லாம் குழந்தைகளுடனும் வீடுவாசல் சொத்துடனும் தான் வாழ்கிறார்கள். இம்மாதிரி சாதாரண முறையில் கல்யாணம் செய்துகொண்டபல நண்பர்கள் இந்த மண்டபத்திலே இருக்கின்றனர். என்னுடைய சொந்தக்கல்யாணத்தில் சடங்குகளை நீக்கியதால் நான் எந்தவகையிலும் தொந்திரவுகளுக்கோ, கஷ்டங்களுக்கோ ஆளாகவுமில்லை மற்ற நண்பர்களைப்போல நானும், வாழ்கிறேன். நான் சொல்லப் பிரியப்படுவதென்னவென்றால் கல்யாணத்திற்கென ஆடம்பரச்செலவு செய்ய வேண்டாம் என்பதும், சாதாரண முறை

(6ம்பக்கம் பார்க்க.)

## விஞ்ஞானவித்தகரின் வீரஉரை.

5ம் பக்கத் தொடர்ச்சி.

...ில் செய்யவேண்டுமென்பதுதான். இளைஞர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, கூடுமானவரை, சிக்கன முறையையும் பயன்தரத்தக்க முறையையும் பின்பற்றவேண்டுமென்பதுதான்.

நான் இந்தத் திருமணத்தை முடிவு செய்வதற்கு முன், மணமக்கள் கல்யாணம் செய்துகொள்ள ஒப்புக்கொள்கிறார்களா என்பதையறிய முயன்றேன். மணமக்களுக்கு ஒவ்வொருவருடைய குணங்களைத் தனித்தனியாகவும் பெற்றோர்கள் முன்னிலையிலும் விளக்கினேன். தவிர மணமக்கள் ஒருவரையொருவர் நன்கு தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வயதிலோ, குணத்திலோ, தோற்றத்திலோ அதிகவித்தியாசம் இல்லை இவர்கள் சரியான பொருத்தமுடையவர்கள் என்றே கருதுகிறேன். மணமக்களைத்தவிர, அவர்கள் பெற்றோர்களும் இத்திருமணத்திற்கு மகிழ்ச்சியே. மணமக்களே கல்யாணம் செய்துக்கொள்ள விரும்பியதால் அவர்கள் மகிழ்ச்சி மிகஅதிகம். மாலைகள், சங்கிலிகள் அல்லது மோதிரங்கள் மாற்றிக்கொண்டு திருமணம் செய்துக்கொள்ளப்பிரியமா அல்லதுமற்ற சொந்தக்காரர்கள் செய்து வரும் வழக்கப்படிவழக்கம்போல் வைதீக முறைப்படி திருமணம்செய்துகொள்ளப் பிரியமா என்று மணமக்களை கேட்டதற்கு மாலை, சங்கிலிமாற்றிக்கொள்ளப் பிரியமென்று பதில் தெரிவித்தார்கள். என்னுடைய கட்டாயத்தினாலோ, மற்றவர் கட்டாயத்தினாலோ அல்லது யாரையாவதுதிருப்திப்படுத்தவேண்டுமென்றோ இவ்வாறு செய்துக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. பல வகையில் ஏற்படும் தொல்லைகள் செலவுகள் முதலியவைகளை விலக்கி சிக்கனமான முறையில், சாதாரண முறையில், கல்யாணம்செய்யலாம் என்பதை வழிகாட்டவே அவர்கள் தைரியமாக இத்தகைய முறைப்படி திருமணத்தைச் செய்துக்கொள்ள ஒப்புக்கொண்டார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாலிபர்கள், இத்தகையமுறையில்திருமணத்தை செய்யத்தாங்கள் முதியோர்களைப்பணியச் செய்வார்களாக இந்த விநாடியிலிருந்து மணமக்கள் கணவனும் மனைவியுமாகி நீண்ட ஆயுளுடன் இன்பமாகவாழ ஆசைப்படுகிறேன். எனது மகள் சரோஜினியைவாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும்படி பாலகிருஷ்ணனையும், எனது மகள் சரோஜினி பாலகிருஷ்ணனை வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் அறிகுறியாக அவர்கள் மாலைகள், சங்கிலிகள், மோதிரங்கள் மாற்றிக்கொண்டு இன்ப மணவாழ்க்கையில் புகுவார்களாக.

## காந்தியார்.

உடல்நிலை காரணமாகச் சர்க்காரால் விடுதலை செய்யப்பட்ட காந்தியாருக்கு இப்போது சிகிச்சையுடன் ஓய்வும் சேர்ந்து நலனளிப்பதாகக் கூறப்படுகிறது.

---

# பார்வதி பி, ஏ;

3-ம் பக்கத்தொடர்ச்சி.

கையிலே அந்தக்காட்சி வெளிவருகிறபோது ஊரார் தனக்கிருக்கும் செல்வாக்கை எண்ணித்தன்னிடம் பெருமதிப்புக் கொள்வார்கள் என்ற பூரிப்பு பார்த்திபனுக்கு. கலாரசிகர் கனகசபேசருக்கோ, இதுபோன்ற ஊர்வலக்காட்சிகளை எந்தெந்தப்புலவர் எப்படியெப்படி வர்ணித்திருக்கிறார்கள் என்ற ஆராய்ச்சி. ஆறுமுகத்துக்கு அன்றுசரியான சந்தோஷம். பெங்களூர் மட்டுமல்ல, பலஊர்களிலே "தொழில்" நடத்தமுடியும் இந்தஒருமகாநாட்டு மதிப்பை முதலாக வைத்துக்கொண்டு என்ற எண்ணம் அவனுக்கு. ஊர்வலத்திலே, முதலாளி மார்களின் அனுமதியின் பேரில் கலந்துகொண்ட தொழிலாளர்கள், இந்த ஆடம்பரத்தைக் கண்டு திகைத்தனர். நம்மிடம் அக்கரை காட்ட இவ்வளவு பணம் செலவாகிறது. நமது நிலையோ ஒன்றும் உயருவதாகக் காணோமே என்றதிகைப்பு அவர்களுக்கு. ஒருபுறம் வாத்தியகோஷம். மற்றோர்புறம் வீரமுழக்கங்கள். முதலாளித்தனம் ஒழிக! தொழில் அரசு ஓங்குக! என்ற அலங்கார அட்டைவளைவுகள். மகாநாட்டு வைபவம் ஒரு திருவிழாபோன்று காணப்பட்டது.

பார்வதி, மகாநாட்டுப்பந்தலிலே, ஒரு மூலையிலே உட்கார்ந்துகொண்டு, நிகழ்ச்சிகளைக் கவனிக்கலானாள். பார்த்திபன், முன்பு இருந்ததைவிடச் சற்றுப்பருத்து இருப்பது கண்டாள். . ஆலாலசுந்திரர், களைத்து இருப்பது தெரிந்தது. கனகசபேசரின் முகம் கலைஉணர்வைக் காட்டுவதுபோல, மாறிமாறி மலர்வதும் குவிவதுமாகஇருந்ததைக்கண்டாள். உள்ளூர் தேவார பஜனைக்கோஷ்டியாரின் பாடலுடன் மகாநாடுதுவங்கிற்று. பிரார்த்தனை முடிந்தபிறகு, தலைவர்களுக்கெல்லாம் ஆறுமுகம் மலர்மாலை சூட்டினான். மகாநாட்டினர், கை தட்டிச் சந்தோஷத்தைத் தெரியப்படுத்தினர்.

"வெள்ளைக்காரர்கள் கூட அவருடன் பேசமுடியாது, அவ்வளவு ஜோராக இங்கிலீஷ் பேசுவாராண்டா, தலைவர்"

"முகத்திலே களை, பாருடா?"

"பக்கத்திலே ஒரு பெரியவர் இருக்கிறாரே, அவர்பெரிய ஜெமீன்தாராம். எத்தனையோ கோடி பணம் இருக்காம் அவரிடம்"

"அவருக்குப் பக்கத்திலே இருப்பவர் பெரிய கவியாம். காளமேகம், கம்பன் போன்றவர்களைவிட மேலாம் இவர்"

"ஆறுமுகம் கெட்டிக்காரப் பேர்வழிடா. எங்கெங்கேயோ இருந்து, யாராரையோ, அழைத்து வந்திருக்கிறான்,"

இப்படி மகாஜனங்கள் மகாநாட்டைப் பற்றி மனம்போன போக்கிலே பேசிக்கொண்டனர். ஆடம்பரத்திலும்வெளிவேஷத்திலும் இவ்வளவு சுலபத்திலே ஏமாந்துபோகும் இந்தமக்களைக்கொண்டு எப்படிச், சமுகப் பொருளாதாரப் புரட்சியை உண்டாக்கமுடியும் என்று பார்வதிஏக்கம் கொண்டாள். அந்நேரத்திலேஆறுமுகம், மகாநாட்டுக்குவந்துள்ள தலைவர்களை, மகாஜனங்களுக்கு அறிமுகப்படுத்தினான். "விளம்பரத்திலே குறிப்பிட்டவர்களிலே ஒரேஒருவர் தான் வரவில்லை. ரோஸ்மேரி அம்மையாருக்குத் திடீரென ஜுரம் வந்துவிட்டதால் அவர்கள் வரமுடியவில்லை என்றுதந்தி கொடுத்துவிட்டார்கள். இது நமக்குப்பெரியவிசனம் கொடுக்கிறது என்றாலும் எல்லாம் நன்மைக்குத்தான் என்ற பழமொழிப்படி, அந்த ரோஸ்மேரி அம்மையார் வராததினால் நமக்கு வேறுஒருநன்மைகிடைத்திருக்கிறது. அந்த அம்மையாருக்குப் பதிலாக, அவர்கள் ஆற்றஇருந்த பணியைச் செய்ய வேறோர் அம்மையார் நமக்கு இன்று கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் சென்னைவாசி, தொழிலாளர் இயக்க விசுவாசி. அவர்களின் பெயர், பார்வதி B. A. என்பதாகும்." என்று ஆறுமுகம் சொன்னான். மேடையிலே விசேஷபரபரப்பு ஏற்பட்டது. பார்த்திபன் திடுக்கிட்டுத் திக்கெட்டும் பார்த்தான், மிரளமிரள. ஆலாலசுந்திரருக்கு உடலேஆட ஆரம்பித்தது. மேடையிலே ஒரு பெண்மணியையுங்காணாததால், பார்வதி B. A. யார், என்று தெரிந்துகொள்ள முடியாது, மகாநாட்டுக்குவந்த மக்கள், யார் பார்வதி? எங்கே?" என்று கேட்டனர். அம்பக் ஆறுமுகம், திடீரென்று இந்தவெடிகுண்டு வீசுவான் என்று ஒருதுளியும் எதிர்பாராத பார்வதி, என்ன செய்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கையில், கையிலே ரோஜாமாலையுடன் ஆறுமுகம், பார்வதி உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து, மாலையைப் பார்வதி கையிலே கொடுத்துவிட்டு, "பார்வதி அம்மையாருக்கு........." என்று பெருங்குரலிலே கூவினான், மகாஜனங்கள், ஜே! ஜே!! என்று பெருங் கூச்சலிட்டனர். பேசாமல் மேடைக்குச்செல்வது தவிர வேறுவழியில்லை பார்வதிக்கு. மேடையை நோக்கிப் புன்னகையுடன் நடந்துவரும் பார்வதியின்கையிலேரோஜாமாலை தான் இருந்தது, ஆனால் கத்தியைஉருவிக்கொண்டு குத்தவருபவனைக்கண்டு பயப்படுவதுபோல, இருந்தது பார்த்திபனின் பார்வை. (தொடரும்)

# சரோஜினி-பாலகிருஷ்ணன் திருமணம்.

## மே. த. கவர்னரின் வாழ்த்து.

### வைதீகம் தலைகாட்டவில்லை.

தேன் சுரக்கப்பேசி இந்துதேசத்தைத் தின்னுதற்கு வான்சுரரை விட்டுவந்த வைதீகப் புரோகிதன் அங்கு இல்லை! களித்திடவருவோரின் கண்களைக் கசக்கிடும் புகையில்லை! அடுப்பறையிலிருக்க வேண்டிய நாநடுக்கூடத்திற்குவந்திருக்கும் அறிவிலாச்செயலான அக்னிக்குண்டமில்லை! பட்டப்பகலில் விளக்கில்லை! பஞ்சாங்கக்கட்டியில்லை! பழங்குலையில்லை, பழய மூட்டைகளில்லை!! அர்த்தமற்ற சடங்கில்லை பொருள் தெரியாக்கூச்சலில்லை! சர்மாவோ சாஸ்திரியோ சனாதனியோ அங்கு ஆட்சிசெய்ய வரவில்லை!!

அழகும் மணமும், அறிவுந் தெளிவும், தமிழும் பண்பும், குறைவர இருந்தது. குனிந்ததலை நிமிராக்குமரியும், அவளைக் கூனுக்கிடும் சேடியும், பெரும்பாரமாம் நகைச்சுமையும், வைதீகப்பித்தரின் விதவிதசேட்டைகளையும் இல்லை! அறிவுக்களை துலங்க, அம்மை சரோஜனி, தனது துணைவர் பாலகிருஷ்ணனுடன், ஆடம்பரம் சிறிதுமின்றி, அமர்ந்திருந்த காட்சி, இருபாலருக்கும் புதுமையான தோற்றத்தைத் தோன்றிற்று.

பாகவத சிரோமணிகள் என்றும், வைணவபக்தர்கள் என்றும் புகழப்படும் நாயுடு வகுப்பினர், எனினும்அங்கு துளசி மாலை அணிந்து வைதீகதுரைத்தனம் செலுத்தும் நாமதாரிகளுக்கு ஆட்சி இல்லை! கோவை மாவட்டச் செல்வக் குடும்பங்களில் ஒன்று, எனினும் அங்கு கூவிக் காணிக்கைக்குவிக்கும் கும்பலுக்கு இடமில்லை. பெற்றோரும், உற்றாரும்பெரு மகிழ்வுடன் வீற்றிருந்தனர். பிரபலஸ்தர்கள்பலரும்,பேசாவாயினராய்,களிப்பைக் காட்டும் கண்ணினராய் அமர்ந்திருந்தனர். மாகாணத்தலைவர், மே.த. கவர்னர் அவர்கள் தமது இல்லக்கிழத்தியாருடன் இனிதுவீற்றிருந்தார்.

எவ்வளவு பெரியஇடத்துக்கலியாணம் அதிலே நுழையவே இடமில்லை, வைதீகத்துக்கு, சடங்குகளுக்கு, சனாதனத்துக்கு. விரும்பி இருந்தால், எவ்வளவு ஆடம்பரம் வேண்டுமானாலும் நடத்தியிருக்கலாம். கலியாணமண்டபம் கோயில்போல ஜோடித்திருக்கலாம், வேதப்பிராமணரை வீதிபூராவும்நிறுத்திக்காட்டி இருக்கலாம், பூரிவாங்க மாகாணம் பூராவிலுமிருந்து பார்ப்பனர்கள் ஓடோடி வந்திருப்பார்கள். ஆனால் நமது விஞ்ஞானவித்தகர், திராவிடத் தளபதி,பகுத்தறிவுக்கு முடிசூட்டுவிழா நடத்த முனைந்தார். பழமையை ஓடோட விரட்டினார். அன்று, அங்கு வந்திருந்தவர்களிலே இலண்டன்வாசம் செய்தும்பழயபோதையை மறவாதவர்கள் பலர்! அறிவுத்துறையிலே தமக்கு அபாரமான பிரேமை உண்டென்று கூறிக்கொண்டே, பழய காடியைப் பருகுவோர் பலர்! எதற்காக இந்தச் சடங்குகள் என்று ஆராய்வதையும் மறந்து, ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என்று இருப்பவர்கள் பலர். இவர்கள் யாவரும், மதச்சடங்கு அறவே நீக்கப்பட்டு, பகுத்தறிவும் பண்பும் மிளிரநடந்தேறிய இத்திருமணத்தைக் கண்டு, G. D. நாயுடு அவர்களின் தீரத்தை வியந்துரைத்தனர்.

கோவை, மோட்டார்மன்னர் தோழர் G. D. நாயுடு அவர்களின் திருக்குமாரி, தோழியர் சரோஜனிக்கும், திருப்பூர் தோழர் L. R. G. நாயுடு அவர்கள்குமாரர் தோழர் பாலகிருஷ்ணனுக்கும், 28—4—44 காலை 9 மணிக்குக் "கோபால பாக்" பங்களாவில்இவ்வாறு திருமணம் நடந்தேறியது.

மே. த. கவர்னர் தம்பதிகளும், மாகாணப்பிரமுகர்கள் அதிகாரிகளுமாகஏராளமானவர்கள் குழுமியிருந்தனர்.

பெரியார் E. V. இராமசாமி, சர். பி. டி. இராசன், N. R. சாமியப்பா, T. M. நாராயணசாமிப்பிள்ளை, பழய கோட்டை பட்டக்காரர் சங்கரண்டான் பாளையம் பட்டக்காரர், ஊத்துக்குழி ஜெமீன்தார், இளையகுமாரபட்டக்காரர் அர்ச்சுனன், ஈரோடு கான்சாகிப் ஷேக் தாவுது, M. சிக்கைய்யா, அண்ணாமலைப் பிள்ளை, உடுமலை கனகராசன், சேலம் சேர்மன்இரத்தினசாமி, C.G.நெட்டோ, C. S. இரத்தினசபாபதி முதலியார், பழனிச்சாமி நாயுடு, தைவல்யம், J. S. கண்ணப்பர், T. சுந்தரராவ் நாயுடு, டாக்டர் A.கிருஷ்ணசாமி,திருமலைசாமி,ஜூபிடர் பிக்சர்ஸ்ஜனாப்மொய்தீன், சோமசுந்தரம், நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன், ஆகியோரும்மற்றும்பலரும்வந்திருந்தனர்.

திருமணத்திற்கு வந்திருந்த மே. த. கவர்னர் தம்பதியையும் மற்றவர்களையும் வரவேற்றும், மூடச்சடங்குகளை நீக்கி விட்டதைவிளக்கியும், தோழர், G. D. நாயுடு அவர்கள் ஒரு சொற்பொழிவாற்றினார்.

மணமக்கள் மாலைமாற்றிக்கொண்டனர். மோதிரம் அணிந்துகொண்டனர். மணவினை அவ்வளவுடன் முடிவுற்றது.

ஜில்லா ஜட்ஜூ, தோழர் சௌத்ரி, அவர்கள், மே. த. கவர்னர் தம்பதியைப் பாராட்டியதுடன், மணமக்களை வாழ்த்தியும், தோழர் G. D. நாயுடு அவர்களின் பகுத்தறிவுத்திறனைப் பாராட்டியும்பேசினார்.

மே. த. கவர்னர் அவர்கள் மணமக்களை வாழ்த்தினார்.

டாக்டர் A. கிருஷ்ணசாமி அவர்கள் வந்தனோபசாரம் கூறினார். மொத்தம் அரைமணிநேரத்தில் திருமணம் நடந்தேறியது.

அன்றுமாலை, கோபால்பாக் மாளிகையில் ஓர்தேநீர் விருந்தளிக்கப்பட்டது. இரவு, செஞ்சிலுவை நிதிக்காக நடத்தப்பட்ட, இராம்குமார் காட்சிக்கு, மே. த. கவனர் அவர்கள் வந்திருந்தார். அதுசமயம், தோழர் G. D. நாயடு அவர்கள் தமது குமாரியின் திருமணத்திற்கெனக் கட்டிய இன்ஷியூர் பணம் 18000மும், பெண்ணுக்கு நகைக்கென தோழர் L. R. G. நாயுடு அவர்கள்தந்த 8000 ரூபாயையும், செஞ்சிலுவைச் சங்கம், யுத்தஆஸ்பத்திரி, நர்சுகளுக்குப் பரிசுகள் என்று பலவாறாகப்பிரித்து, நன்கொடைகளாக்கிக் கவர்னரிடம்தந்தார்.

புரோகிதமோ, சடங்கோ இன்றி, கோவை மாவட்டத்திலே பெரியஇடத்திலே நடந்தஇத்திருமணம், ஊரிலே விசேஷ பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

---

### ரஷ்ய மே தினம்.

என்றுமே மகிழ்ச்சிக்குரிய மேதினம், இவ்வாண்டு, மட்டற்ற மகிழ்ச்சிக்குரியதாகி இருக்கிறது.மாஸ்கோமீது பாய்ந்துவந்த ஜெர்மானியர் இப்போது ஓடுகிறார்கள். முக்கியமான இராணுவ முக்யத்துவம் இயற்கை வளமும் உள்ள இடங்கள் ஜெர்மானியரிடமிருந்து திருப்பிப் பிடிக்கப்பட்டுவிட்டது. செபாஸ்டபோல் கோட்டையும் பிடிபடும் சமயம் நெருங்கிவிட்டது. இந்த வெற்றிப் பெருமிதத்தோடு, வீரஉரையாற்றி இருக்கிறார் ஸ்டாலின்."அடிபட்ட மிருகம் ஜெர்மனி! புண்ணை ஆற்றிக்கொள்ள, குகையை நோக்கி ஓடுகிறது. இப்போது அதனை இருபுறமும் வளைத்துக்கொண்டு அடிக்க வேண்டும். ரஷ்யப் படைகள், கிழக்கு முனையிலிருந்து தாக்கிடும்போது நேசநாட்டுப்படைகள் மேற்குமுனையிலிருந்து அந்த மிருகத்தைத்தாக்கி ஒழிக்கவேண்டும்" என்றுஸ்டாலின் பேசியிருக்கிறார். இரண்டாம் போர்முனைக்குச் சகலமும் தயாராகிவிட்டதென்று நேசநாடுகள் தெரிவிக்கின்றன.

---

### பிராங்கோ பணிவு.

ஸ்பானிஷ் சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோ, டான்ஜியர்ஸ் எனும் தளத்திலிருந்து, அச்சுஸ்தானீகர்களை அப்புறப்படுத்தஇணங்கிவிட்டார். பிராங்கோவின் இப்பணிவு, நேசநாட்டு வெற்றி நிச்சயம் என்பதை எடுத்துக்காட்டும் சம்பவமாக மதிக்கப்படுகிறது.

# கோவை ஜில்லா, திராவிட வாலிபர் மாநாடு.

ஈரோடு. எப் 18—

கோவை ஜில்லா, திராவிட வாலிபர் மாநாடு நேற்று சரசுவதிஹாலில் தோழர் C. N. அண்ணாத்துரை தலைமையில், நடந்தது. பெரியார் இராமசாமி சில நிமிஷம் மாநாட்டில் வந்திருந்தார். தோழர் இ. ரா. நெடுஞ்செழியன் திராவிடக்கொடியை ஏற்றுவித்தார்.

தோழர் க. அன்பழகன், மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், தமிழர் என்பதை, திராவிடர் என்று மாற்ற வேண்டிய அவசியத்தைப்பற்றியும், திராவிடர் என்றால் ஆரியர் அல்லாத எல்லோரையும் குறிப்பிடுமென்றும் கூறினார்.

தோழர்ந. அர்சுனன். வரவேற்புக்கமிட்டித்தலைவர் வரவேற்புபிரசங்கத்தில், திராவிடரின் பழைய உன்னதநிலையை அடைவதற்குத் திராவிடர்கள் பாடுபடவேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டார். சி. என். அண்ணாத்துரை தமதுதலைமைப் பிரசங்கத்தில் திராவிட நாட்டுப்பிரிவினையின் அவசியத்தைப் பற்றி விரிவாகப் பேசினார்.

வெங்கடசாமி நாட்டார், டாக்டர் மதுரம் இவர்களின் மரணத்தைக்குறித்து அனுதாபத் தீர்மானமும், பெரியார் இராமசாமி அவர்களின் அண்ணார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கட்கு 'வைத்திய வள்ளல்' என்றபட்டம் கொடுக்கப்பட்டதைப் பாராட்டியும், சங்கத்தலைவர்களை, திராவிடரால் நடத்தப்படும் சிலபத்திரிகைகள் இழித்துக்கூறுவதைக் கண்டித்தும் தொழிலாளர்களை உயர்த்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், திராவிட நாடு, தனியாகப் பிரிக்கப்படவேண்டுமென்றும், தெருக்கள், வீதிகள், ஊர்கள் பெரியார் ஈ. வெ. ரா. பெயரிடப்பட வேண்டுமென்றும் முத்தமிழும் திராவிடருக்குப் பயன்படும்படி அமைக்கப்பட வேண்டுமென்றும், தென்னிந்தியா ரயில்வேயும், மராட்டாரயில்வேயும் ஒன்று சேர்க்கப்பட்டு 'திராவிட ரயில்வே, என்று அழைக்கப்படவேண்டுமென்றும், ரயில்வே ஆபீசுகளில் திராவிடர்கள் அதிகமாக நியமிக்கப்படவேண்டுமென்றும், நீதிக்கட்சியை திராவிடக்கழகமென்று மாற்றவேண்டுமென்றும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பச்சையப்பன் கல்லூரியிலும் உணவுச்சாலைகளில் ஆரிய-திராவிட வித்தியாசங்களை ஒழித்ததைப் பாராட்டியும் வித்வான்என்பதை மாற்றிப் 'புலவர்' என்று வைத்துக்கொள்வதைப் பாராட்டியும் உணவுச்சாலைகளில் திராவிட சமயல்காரர்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு "பாரதிதாசன் தினம் எனும்" ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. என். அண்ணாத்துரை முதலியோர் பேசினார்கள். ஞாயிறன்று இம்மாகாணத்திலுள்ள திராவிட மாணவர்கள் கூட்டமொன்று நடத்தப்பட்டது. தோழர் சி. என். அண்ணாத்துரை T. P. வேதாச்சலம் முதலியோர் கலந்துக்கொண்டனர். மாணவர்கள் எவ்வாறு இவ்வியக்கத்தில் பாடுபடவேண்டுமென்றும், இந்த ஒய்வு நாட்களில் மாணவர்கள் சுற்றுப்பிரயாணம்செய்து, கட்சிப்பிரசாரம் செய்வதென்றும் பிரசாரக் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது.

## "செல்வம் மண்டபம்"

திராவிடமணி சர். A. T. பன்னீர்ச் செல்வம் நினைவுக்குறியாக ஒரு மண்டபமும், நூல் நிலையமும் தஞ்சாவூரில் அமைப்பது என்றும், அதற்காகக் குறைந்தது 1,25000 ரூபாய் நிதிதிரட்டுவதென்றும், தஞ்சையில் சென்ற கிழமை சர். P. T. ராஜன்அவர்கள் தலைமையில்நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ராவ்சாகிப் I. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் யோசனையின் பேரில், நிதிதிரட்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. இக் கமிட்டியில், ராவ்பகதூர் N. R. சாமியப்பா, M. L. C; ராவ்பகதூர் அருளானந்தசாமி நாடார், குன்னம் சுப்பிரமணிய ஐயர், ஜனாப் சையத்தாஜுதீன் ஆகியோரும் மற்றும் சிலரும், அங்கத்[தி]னர்களாகச்சேர்க்கப்பட்டனர். இச்சீரி[ய] முயற்சியைநாம் பாராட்டுகிறோம். வி[ரை]விலே நிதிக்கமிட்டியினர் ஒவ்வொரு வ[ட்]டாரத்திற்கும் சுற்றுப்பிரயாணம்செய்[து] ஒரு பெருந்தொகைதிரட்ட வேண்டு[கி]றோம்.

—

## அல்லாடுகிறார்கள்!

சர். P. T. ராஜன் அவர்களைத் தலை[வ]ராகக்கொண்டு சென்னையில் நிருவப்பட்[ட] மாகாண பார்ப்பனரல்லாதார் வக்கீல்ச[ங்]கம், வகுப்புவாத முயற்சி என்றும், இ[ந்]தப்போக்கைத்தடுக்க வேண்டுமென்று[ம்] அக்ரகார வக்கீல்கள் அலறுகிறார்கள். ச[ர்.] அல்லாடியாரும், T. R. வெங்கடரா[ம] சாஸ்திரியாரும்,குடந்தையிலேகூடி வகு[ப்]புவாதம் வக்கீல் தொழிலினுயா என்[று] கண்டித்தனராம். இந்த வகுப்புவாதமுய[ற்]சியை முறியடிக்கப் பிரசாரம்செய்ய ஒ[ரு] கமிட்டி அமைக்கவேண்டுமென்று, [தீர்]மானம் கொண்டுவர, இருந்தனரா[ம்.] பிறகு வேண்டாம் என்று இருந்துவிட்[ட]னராம். ஆரியம் என் இப்படி அலறு[கி]றது! குடந்தைப், பார்ப்பனரல்லாத [வக்]கில்களே! நீங்கள் சர். அல்லாடியாருக்[கு] தரவேண்டியபதில் என்ன! அறிக்கைய[ல்ல] அல்ல! குடந்தையில், பார்ப்பனரல்லாத[ார்] வக்கீல் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதென[்ற] செய்தியை அனுப்பிவையுங்கள். அ[து] போதும் அக்ராகாரத்தை அல்லாடச்செ[ய்]யும்.




முக்கிய நகரங்களில் விற்பனைச்செய்ய ஏஜண்டுகள் தேவை.

விபரத்திற்கு எழுதவும்:— சித்தர் மனை, புதுச்சேரி. (F. I.)

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.